Urgent
Mrs Karthika
pl. attend to this
15/11/16

# ஆதிதிராவிடர் நல இயக்ககம்

விடுநர்
திரு.க. சிவசண்முகராஜா, இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை – 5.

பெறுநர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

14 NOV 2016

**ந.க.எண். எல்1/17286/2015, நாள் 14.11.2016**

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை – 2016–17ம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்க ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளுதல் – மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு தெரிவித்தல் – சம்மந்தப்பட்ட அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

14/11/16

பார்வை: இவ்வலுவலக ந.க.எண். எல் 1/19825/2016–1 நாள். 06.10.2016

-o-

52

2016–17க்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை இணையதளம் வழியாக மாணவர்களின் விபரங்கள் பதியும் பணி 12.11.2016 முதல் தொடங்கியுள்ளது. இதனை, சிறப்பாகவும் காலதாமதமின்றி கல்வி உதவித்தொகை மாணவ/மாணவியர்களுக்கு சேரும்பொருட்டு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் கல்லூரிகள் / பள்ளிகளின் நிர்வாக அலுவலர்களுக்கு கீழ்காணும் விபரங்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தின் (National eScholarship Portal NSP 2.0) மூலம் சில கல்வி நிறுவனங்கள் கல்வி உதவித்தொகைக்காக விண்ணப்பித்துள்ளது தெரியவருகிறது. ஆனால், கல்வி உதவித்தொகை திட்டத்தை NSP 2.0 மூலம் செயல்படுத்துவதில் தற்போதுள்ள இடப்பாடுகளை கருத்தில் கொண்டு, அரசு 2016–17ம் கல்வியாண்டில் SC,ST மற்றும் SCC மாணாக்கர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களை தற்போதுள்ள மாநில இணையவழி செயலாக்கத்தின் (State webportal - http://escholarship.tn.gov.in/) மூலம் செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது. எனவே, 2016–17ம் கல்வியாண்டிற்கான ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்கள் மாநில இணையவழி செயலாக்கத்தின் மூலம் மட்டுமே செயல்படுத்தப்படும்.

2. 2016–17ம் கல்வியாண்டிற்கு கல்வி நிறுவனங்கள் இணையவழியில் கல்வி உதவித்தொகைக்காக விண்ணப்பிக்கும் முன் கல்வி நிறுவனங்கள் login ல் தவறுதலாக பதியப்பெற்ற, இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் பல்வேறு காரணங்களால் கல்வி உதவித்தொகை பெற தகுதியில்லாத காரணத்தால் கல்வி நிறுவனங்கள் அளவில் நிலுவையில் உள்ள student ID க்களை இணையவழியில் DISCONTINUE செய்யப்பட வேண்டும். தகுதியுடைய மாணாக்கர்களின் விண்ணப்பங்கள் மட்டும் இணையதளத்தில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE MOGAPPAIR WEST, CH-37

Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
Chennai - 600 037.

அனுப்புநர்

திருமதி மு. கலைச்செல்வி,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

பெறுநர்

1. முதல்வர்,
   அனைத்து கல்லூரிகள்,
   திருவள்ளூர் மாவட்டம்.

2. தலைமை ஆசிரியர்/ஆசிரியை,
   அரசு உயர் நிலை / மேல்நிலைப்பள்ளிகள்,
   திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்: ஜே2/18229/2017 நாள்: 01.11.2017

அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - திருவள்ளூர் மாவட்டம் - கல்வி உதவித் தொகை - படிவங்கள் - 2017-18 ம் நிதியாண்டு - பெற்றுச் செல்லக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

*****

2017-18 ஆம் நிதியாண்டிற்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு இணையதள வழியாக வழங்க வேண்டிய போஸ்ட் மெட்ரிக்/ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்காகன படிவங்கள் தற்போது வரப்பெற்றுள்ளது. எனவே தங்களின் அலுவலக கடிதத்தோடு தேவைப்படும் எண்ணிக்கையினை குறிப்பிட்டு உடனடியாக விண்ணப்பங்களை பெற்றுச்செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மு) கலைச்செல்வி 1-11-2017
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

நகல் :

முதன்மை கல்வி அலுவலர்,
திருவள்ளூர்.

@ 1/11/2017

Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
Chennai - 600 037.

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE * MOGAPPAIR WEST, CH-37 *

# Pre Matric & Post Matric_SC/ST Scholarship Applications_2017-2018-Reg.

MAR GREGORIOS COLLEGE
06 NOV 2017

Inbox x

Mon, Nov 6, 2017 at 2:47 PM

**DADWO, TIRUVALLUR via nic.in**

to iftponneri, imamaritime, imachennai41, www.admin, my_jcas, jayabedcollege, sietcollege, jayapharmacy20., jayacpt202, info, lcrcet, officejpc_567, jayasuriyaengg, mailtojayatti, contact, jnnie, jnntti2007, admission.jbgc, jvconpadi, kalaibharathit., kanniyappatrust, kjnedu2008, kitchennai, kptc2012, principal

Sir/Madam,

Please find the attachment.

Mrs. Karthika Scholarships i/c Pl. attend to this.

8/11/17

Gmail

MAR GREGORIOS COLLEGE 1? JAN 2019

Mar Gregorios <margregorioscollege@gmail.com>

# 2018-19-Post Matric Scholarship-College- Online Renewal application-Enabled Intimated-reg

1 message

**DADWO, TIRUVALLUR** <dadwo.tntlr@nic.in> Fri, Jan 18, 2019 at 1:22 PM
To: iftponneri@gmail.com, imamaritime@gmail.com, imachennai41@gmail.com, www.admin@jaishritrust.org, my_jcas@yahoo.com, jayabedcollege@rediffmail.com, sietcollege@hotmail.com, jayapharmacy2005@gmail.com, jayacpt202@gmail.com, info@jec.ac.in, lcrcet@gmail.com, officejpc_567@yahoo.com, jayasuriyaengg@yahoo.com, mailtojayatti@rediffmail.com, contact@agarsencollege.com, jnnie@jnn.edu.in, jnntti2007@gmail.com, admission.jbgc@gmail.com, jvconpadi@gmail.com, kalaibharathitti@gmail.com, kanniyappatrust@yahoo.com, kjnedu2008@gmail.com, kitchennai@yahoo.com, kptc2012@gmail.com, principal@lngovernmentcollege.com, r.ealumalai@yahoo.com, madrasinstitute@gmail.com, admin@magnace.edu.in, mahalashmiwomenscollege@gmail.com, mangalambedcollegetmvoyal@gmail.com, mangalamttithirumullaivoyal@gmail.com, margregorioscollege@gmail.com, mrgptsys@murugappapoly.ac.in, nationalpharmacycollege2002@gmail.com, nazarethcollege@gmail.com, info@ncefw.in, oacn1992@gmail.com, info@ourladycollegeofeducation.com, info@panimalar.ac.in, info@pit.ac.in, pdch.office@indiraeducational.org, principal.pmrengg@gmail.com, pmrinstitute@yahoo.com, psnascollege@gmail.com, scholarship@prathyusha.edu.in, mail@ritchennai.edu.in, rangaswamyramanujam@gmail.com, office@rbgjaincollege.in, rgntcollegeofnursing@yahoo.in, rmdecp@gmail.com, rmkcetoffice@gmail.com

Dear Sir / Madam

2018-2019 Online Post Metric Scholarship Renewal Process for Colleges Web Portal Opened on 09.01.2018 . All Self Finance Colleges Renewal Process Done Quickly.

All Govt / Govt Aided Colleges are update ur fee details in web portal ... Submit Hard copy for approval . then only renewal process working ...

any colleges have students account no problem for the year 2017-2018 ... ECS Return Update done in principal login .... That Students account no update option given in Scholarship menu

Select -> Scholarship menu --> Request for change Aadhaar / SSLC / HSLC Reg / Renewed Student Acc No ... ---> UPdate Current Account No ...

--

Thanks & Regards,
DAD & TWO,
Tiruvallur.

Mrs. Karthika
M. attend to this immediately
15/1/19

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE MOGAPPAIR WEST, CH-37

Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
Chennai - 600 037.

ஜெ.விஜயாராணி. இ.ஆ.ப.,
ஆணையர் (பொ).

ஆதிதிராவிடர் நல ஆணையரகம்.
சென்னை–5.

நே.மு.க.எண். எல்2/941/2020 நாள். 20.02.2020.

எனதன்பார்ந்த,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம் – 2019–2020 ஆம் கல்வியாண்டு – புதிய மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் – துவங்கப்பட உள்ளது – அனைத்து விண்ணப்பங்கள் – 100% சரிபார்த்து ஒப்பளிப்பு செய்தல் – தொடர்பாக .

பார்வை: தொடர்புடைய ஆவணங்கள்.

---

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 2019–2020 ஆம் கல்வியாண்டில் தங்கள் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் சார்பான புதிய மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை இணையவழியில் பெறுவதற்கு கல்வி உதவித்தொகை இணையதளமானது 21 .02.2020 அன்று திறக்கப்பட உள்ளது.

எனவே கல்லூரிகளிடமிருந்து இணையவழியில் பெறப்படும் விண்ணப்பங்களில் ஒரு மாணவரின் விவரத்தினை வேறு ஒரு மாணவருக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தும் அம்மாணவர்களின் விவரங்களை 100% சரிபார்த்து 03.03.2020 க்குள் பரிந்துரை செய்ய கேட்டுக்கொள்கிறேன். இவ்விவரங்கள் தினசரி தலைமை அலுவலகத்தில் சரிபார்க்கப்படும்.

இந்நேர்வில் எக்காரணம் கொண்டும் காலநீட்டிப்பு செய்யப்படமாட்டாது எனவும், சுணக்கம் ஏற்படின் காரணமான அலுவலர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
20/2/20
(ஜெ.விஜயாராணி)

Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
Chennai - 600 037.

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE * MOGAPPAIR WEST, CH-37 *

பெறுநர்
திரு / திருமதி.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்.

அனுப்புநர்:

திரு.தி.சரவணன்,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

பெறுநர்:

முதல்வர்கள்,
அனைத்து கல்வி நிறுவனங்கள்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.ஜே2/46/2021, நாள்: .01.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - திருவள்ளூர் மாவட்டம் - கல்வி உதவித்தொகை - 2020-2021 ஆம் கல்வியாண்டிற்கு விண்ணப்பங்கள் வழங்குவது - தொடர்பாக.

பார்வை: தோற்றம்.

*****

2020-2021 ஆம் கல்வியாண்டிற்கான ப்ரிமெட்ரிக்/ போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் முதல்வர்களின் ஒப்புதல் கடிதத்துடன் 06.01.2021 முதல் 13.01.2021 வரை தேவையான விண்ணபங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு:- முதல்வர்களின் ஒப்புதல் கடிதத்தில் தேவையான விண்ணப்பங்களின் எண்ணிக்கை விவரத்தை குறிப்பிடவும்.

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

Dr. M. SIVARAJAN M.B.A., M.Phil., M.A., M.Phil., Ph.D.,
Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
MOGAPPAIR WEST, CHENNAI - 600 037.

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE MOGAPPAIR WEST, CH-37

//மின்னஞ்சல் மூலமாக//

அனுப்புநர்

திரு.தி.சரவணன் ,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

பெறுநர்

கல்லூரி முதல்வர்கள்,
அனைத்து அரசு / அரசு உதவிபெறும் /
சுயநிதி/ மருத்துவம் / பொறியியல் / கலை
மற்றும் அறிவியியல் / தொழில் நுட்பம் /
கல்வியியல் / ஆசிரியர் பயிற்சி / செவிலியர்
கல்லூரிகள்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்: ஜே2/2367/2021, நாள்: 17.02.2021

அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - திருவள்ளூர் மாவட்டம் - கல்வி உதவித்தொகை - 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் கல்வி உதவித் தொகை திட்டத்தினை பல்வேறு மாற்றங்கள் செய்யவிருப்பது - பள்ளி/ கல்லூரிகள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்த ஆய்வுக்கூட்டம் 23.02.2021 அன்று நடைபெறுதல் - கலந்துகொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை: ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். எல்2/33011/2020-1, நாள்:30.12.2020.

*****

2020-2021-ஆம் கல்வியாண்டில், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மாணாக்கர்களுக்கு கல்விக்கட்டணம் மற்றும் கல்வி உதவித்தொகை இணையதளம் வழியாக வழங்கும் பொருட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட்டம் வருகின்ற 23.02.2021 - செவ்வாய்க்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, கல்வி உதவித்தொகை வழங்குவது தொடர்பாக ஆய்வுக்கூட்டம் வருகின்ற 23.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு திருவள்ளூர், திருப்பாச்சூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் முதல்வர்கள் மற்றும் கல்வி உதவித்தொகை செயலாக்கத்தில் ஈடுபட்டுள்ள உதவியாளர் ஆகியோர் தவறாது கலந்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தி.சரவணன்
17/2/2021

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருவள்ளூர்.

நகல் :

ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

17/2/2021

MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE *MOGAPPAIR WEST, CH-37*

Dr. M. SIVARAJAN M.B.A., M.Phil., M.A., M.Phil., Ph.D.,
Principal
MAR GREGORIOS COLLEGE OF ARTS & SCIENCE
MOGAPPAIR WEST, CHENNAI - 600 037.